# பொருள் இலக்கணம்

| பொருள் இலக்கணம் | | |
|---|---|---|
| 1. அகப்பொருள் | | 2. புறப்பொருள் |
| 1. முதற்பொருள் | | |
| நிலம் | பொழுது | |
| – | சிறுபொழுது | |
| | பெரும் பொழுது | |
| 2. கருப்பொருள் | | |
| 3. உரிப்பொருள் | | |

### அகப்பொருள்

ஒத்த அன்புடைய தலைவனும்,தலைவியும் தம்முள் அனுபவிக்கும் இன்பத்தைப் பற்றி கூறுவது அகப்பொருள் எனப்படும். பிறரிடம் கூற இயலாததாய் உள்ளத்தால் மட்டுமே உணர்ந்து அனுபவிக்கத் தக்கதாய் இருப்பதால் இதனை அகப்பொருள் என்பர். திணை – ஒழுக்கம்.

### அகப்பொருள் திணைகள்

அகப்பொருள் திணைகள் 5 வகைப்படும்.

1. குறிஞ்சி
2. முல்லை
3. மருதம்
4. நெய்தல்
5. பாலை

### திணைகளின் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள்

| | |
|---|---|
| முதற்பொருள் | ஒவ்வொரு திணைக்கும் உரிய நிலமும் பொழுது முதல் பொருள் ஆகும். |
| கருப்பொருள் | ஐந்துநிலங்களுக்கு உரிய தெய்வம், மக்கள், உணவு, பறவை, விலங்கு, ஊர், நீர், பூ, மரம், பண், யாழ், பறை, தொழில் ஆகியவை கருப்பொருளாகும். |
| உரிப்பொருள் | ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய அக ஒழுக்கம் உரிப்பொருள் எனப்படும். |

### பொழுதின் வகைகள்

- பெரும்பொழுது
- சிறு பொழுது

### பெரும்பொழுது

பெரும்பொழுது என்பது ஒரு ஆண்டின் கூறுபாடு ஆகும். இது ஆறு வகைப்படும்.

| | | |
|---|---|---|
| 1. | இளவேனில் | சித்திரை, வைகாசி |
| 2. | முதுவேனில் | ஆணி , ஆடி |
| 3. | கார் | ஆவணி , புரட்டாசி |
| 4. | குளிர் | ஐப்பசி ,கார்த்திகை |
| 5. | முன்பனி | மார்கழி , தை |
| 6. | பின் பணி | மாசி ,பங்குனி |

### சிறுபொழுது

சிறுபொழுது என்பது ஒரு நாளின் கூறுபாடு ஆகும் இது ஆறு வகைப்படும்.

| | | |
|---|---|---|
| 1. | காலை | காலை 6:00 மணி முதல் 10 மணி வரை |
| 2. | நண்பகல் | காலை 10 மணி முதல் பிற்பகல் 2:00 மணி வரை |
| 3. | எற்பாடு | பிற்பகல் 2 மணி முதல் மாலை 6 மணி வரை |
| 4. | மாலை | மாலை ஆறு மணி முதல் இரவு 10 மணி வரை |
| 5. | யாமம் | இரவு 10:00 மணி முதல் இரவு இரண்டு மணி வரை |
| 6. | வைகறை | இரவு 2 மணி முதல் காலை 6 மணி வரை |

எற்பாடு = எல் + பாடு
எல் – ஞாயிறு
பாடு – மறையும் நேரம்

### முதற்பொருள்

www.tnpscgroup4.in

| திணை | நிலம் | பெரும் பொழுது | சிறு பொழுது |
|---|---|---|---|
| குறிஞ்சி | மலையும் மலை சார்ந்த இடமும் | குளிர் காலம், முன்பனி காலம் | யாமம் |
| முல்லை | காடும் காடு சார்ந்த இடமும் | கார் காலம் | மாலை |
| மருதம் | வயலும் வயல் சார்ந்த இடமும் | ஆறு பெரும்பொ ழுதுகள் | வைகறை |
| நெய்தல் | கடலும் கடல் சார்ந்த இடமும் | ஆறு பெரும் பொழுதுகள் | ஏற்படு |
| பாலை | மணலும் மணல் சார்ந்த இடமும் | இளவேனில், முதுவேனில், பின் பணி | நண்பகல் |

## தொல்காப்பியம் கூறும் செய்யுள் உறுப்புகள் 34

| | | | | |
|---|---|---|---|---|
| மாத்திரை | மரபு | திணை | பயன் | மாட்டு |
| எழுத்து | தூக்கு | கைக்கோள் | மெய்ப்பாடு | வண்ணம் |
| அசை | தொடை | கூற்று | எச்சம் | அம்மை |
| சீர் | நோக்கு | கேட்போர் | முன்னம் | அழகு |
| அடி | பா | கலன் | பொருள் | தொன்மை |
| யாப்பு | அளவு | காலம் | துறை | தோல் |
| விருந்து | இயைபு | புலன் | இழைபு | |

## உரிப்பொருள்

| | |
|---|---|
| குறிஞ்சி | புணர்தலும் புணர்தல் நிமித்தமும் |
| முல்லை | இருத்தலும் இருத்தல் நிமித்தமும் |
| மருதம் | ஊடலும் ஊடல் நிமித்தமும் |
| நெய்தல் | இரங்கலும் இரங்கல் நிமித்தமும் |
| பாலை | பிரிதலும் பிரிதல் நிமித்தமும். |

## கருப்பொருள்

| | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|
| தெய்வம் | முருகன் | திருமால் | இந்திரன் | வருணன் | கொற்றவை |
| மக்கள் | வெற்பன், குறவர், குறத்தியர் | தோன்றல், ஆயர், ஆய்ச்சியர் | ஊரன், உழத்தியர், உழவர் | சேர்பன் பரத்தியர், பரதர் | எயினர், எயிற்றியர் |
| உணவு | மலைநெல், திணை | வரகு, சாமை | வெண்ணெல், செந்நெல் | மீன், உப்புக்கு பெற்ற பொருள் | சூரையாடலால் கிடைக்கும் பொருள்கள் |
| விலங்கு | புலி, சிங்கம், கரடி | முயல், மான் | எருமை, நீர்நாய் | முதலை, சுறா | வலியிழந்த யானை, செந்நாய் |
| பூ | குறிஞ்சி, காந்தல், வேங்கை | முல்லை, பிடவம் | செங்கழுநீர், தாமரை | தாழை, நெய்தல் | குரவம், பாதிரி |
| மரம் | அகில், வேங்கை | கொன்றை, காயா | காஞ்சி, மருதம் | புன்னை, ஞாழல் | இலுப்பை, பாலை |
| பறவை | கிளி, மயில் | காட்டுக்கோழி | நீர்க்கோழி, நாரை, அன்னம் | கடற்காகம் | பருந்து, எருவை |
| ஊர் | சிறுகுடி | பாடி, சேரி | பேரூர், மூதூர் | பட்டினம், பாக்கம் | குறும்பு |
| நீர் | அருவிநீர், சுனை நீர் | காட்டாறு | மனைக்கிணறு பொய்கை | மணற்க்கிணறு உவர்க்கழி | வற்றிய சுனை கிணறு |
| பறை | தொண்டகம் | ஏறுகோட்பறை | மணமுழவு நெல்லரிக்கினை | மீன்கோட் பறை | துடி |
| யாழ் | குறிஞ்சி யாழ் | முல்லை,யாழ் | மருத யாழ் | விளரி யாழ் | பாலை யாழ் |
| பண் | குறிஞ்சிப்பண் | சாதாரி பண் | மருதப்பன் | செவ்வழிப்பண் | பஞ்சுரம் |

www.tnpscgroup4.in

| தொழில் | தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல் | ஏறுதழுவுதல் நிரை மேய்த்தல் | நெல்லரிதல், களை பறித்தல் | மீன் பிடித்தல் உப்பு விளைவித்தல் | வழிப்பறி ஆநிரை கவர்தல் |
|---|---|---|---|---|---|

**புறப்பொருள்**

பிறரிடம் கூறத்தக்கதாய் அமைந்த அறம்,பொருள் ஆகியவற்றைப் பற்றி கூறுவது புறப்பொருள் ஆகும். புறம் என்றால் **வெளியே** என்று பொருள்.

**புறநானூறு புறநகர்**

- **புறம்** என்றால் பக்கம் என்ற பொருளும் உண்டு.

  **எடுத்துக்காட்டு**

  உட்புறம், வெளிப்புறம்,வலப்புறம், மேற்புறம்.

- புரம் என்பது நகரம் என்ற பொருளில் வரும்.

  **எடுத்துக்காட்டு**

  காஞ்சிபுரம், விழுப்புரம்

**புறப்பொருள் வெண்பா மாலை**

வெட்சி நிரைகவர்தல் மீட்டல் கரந்தையாம்
வட்கார் மேற்செல்வது வஞ்சியாம் – உட்கா(து)
எதிரூன்றல் காஞ்சி எயில்காத்தல் நொச்சி,
அதுவளைத்த வாகும் உழிஞை – அதிரப்
பொருவது தும்பையாம், போர்க்களத்து மிக்கார்
செருவென் றதுவாகை யாம்.

**– ஐயனாரிதனார்.**

**புறப்பொருள் திணைகள் (புறப்பொருள் வெண்பாமாலை)**

| திணை | விளக்கம் | பூவின் தன்மை |
|---|---|---|
| வெச்சித் திணை | ஒரு குழுவினரிடம் இருந்து மற்றொரு குழுவினர் ஆநிரைகளைக் கவர்ந்து வர வெட்சிப் பூவை சூடிக் கொண்டு செல்வர். | வெற்றி பூ சிவந்த நிறமுடையது, இதனை **இட்லி பூ** என்றும் அழைப்பர். |
| கரந்தை திணை | பகைவரால் கவர்ந்து செல்லப்பட்ட தம்முடைய ஆநிரைகளை மீட்க செல்பவர்கள் கரந்தை பூவை சூடிச் செல்வர். | சிறிய முட்டை வடிவில் கொத்து கொத்தாக பூக்கக்கூடிய நறுமணமிக்க செடி கரந்தை ஆகும்.<br>இது சிவப்பு, நீளம், இளஞ்சிவப்பு கலந்த சிவப்பு ஆகிய நிறங்களில் பூக்கின்றது. இதனை கொட்டைக்கரந்தை என்றும் அழைப்பர். |
| வஞ்சித்திணை | மண்ணாசை காரணமாக பகைவர் நாட்டை கைப்பற்ற செல்வோர் வஞ்சிச் பூவை சூடி செல்வர். | பளபளப்பான, மெல்லிய பூவின் இதழ்களில், வெள்ளிய பஞ்சு போன்ற நுண்மயிர் அடர்ந்துள்ளது வஞ்சிப்பூ ஆகும். |
| காஞ்சித்திணை | தன் நாட்டை கைப்பற்ற வந்த மாற்றரசனோடு போரிடுவோர் காஞ்சி பூவை சூடி செல்வர். | காஞ்சி என்பது ஒருவகை குறு மரம் இதில் கொத்து கொத்தாக நீல நிறத்தில் பூத்திருக்கும், மலர்கள் காஞ்சி மலர்கள் எனப்படுகின்றன. |

| | | |
|---|---|---|
| உழிஞைத் திணை | மாற்றரசனின் கோட்டையை கைப்பற்ற செல்லும் வீரர்கள் உழிஞைப் பூவை சூடி செல்வர். | வேலிகளில் படரும் நீண்ட கொடியே உழிஞைக் கொடி ஆகும். இதன் மலர்கள் மஞ்சள் நிறத்தில் காணப்படும். இதனை முடக்கத்தான் (முடக்கொற்றான்) என்று அழைப்பர். |
| நொச்சித் திணை | கோட்டையை முற்றுகையிட்ட பகையரசனோடு கோட்டையின், உள்ளிருந்தே நொச்சிப் பூவை சூடி வீரர்கள் போரிடுவதாகும். | நொச்சிப் பூ, மருத நிலத்துக்கு உரியதாகும். இவை நீல நிறம் உடையவை. இதில் மணி நொச்சி, கருநொச்சி, மலை நொச்சி, வெண்ணொச்சி என பல வகைகள் உள்ளன. |
| தும்பை திணை | இரு பக்க வீரர்களும் பரந்த போர்க்களத்தில் எதிர், எதிர் நின்று போரிடுவதாகும். இரு பக்க வீரர்களும் தும்பை பூமாலை சூடி இருப்பார்கள். | தூய வெண்ணிற மலர்களை உடைய பூ தும்பை பூவாகும். |
| வாகைத் திணை | ஊரில் வெற்றி பெற்ற மன்னன் வாகைப் பூ சூடி மகிழ்வது வாகை திணையாகும். | மங்கிய வெந்நிறத்தில் நறுமணமுடைய பூ வாகைப்பூ ஆகும். |
| பாடான் திணை | பாடுவதற்குத் தகுதியுடைய ஆளுமையாளரின் கல்வி, வீரம், செல்வம், புகழ், கருணை முதலியவற்றை பற்றி பாடுவது பாடாண் திணை ஆகும்.பாடு+ ஆண் + திணை = பாடாண் திணை ஆகும். | |
| பொதுவியல் திணை | வெட்சி முதல் பாடாண் வரை உள்ள புறத் திணைகளில் பொதுவானவற்றையும், கூறப்படாதவற்றையும், கூறுவது பொதுவியல் திணையாகும். | |
| கைக்கிளை | ஒரு தலைக்காமம் ஆண், பெண் இருவரில் யாராவது ஒருவரிடம் மட்டும் தோன்றும் அன்பு. | |
| பெருந்திணை | பொருந்தாக் காமம் ஒத்த வயதுடைய தலைவனும், தலைவியும் அல்லாத இடத்து உண்டாகும் அன்பு. | |


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

**புறப்பொருள் (தொல்காப்பியம்)**

**தொல்காப்பியர் காட்டிய அகத்திணைகள் ஏழு ;**

1. கைக்கிளை
2. முல்லை
3. குறிஞ்சி
4. பாலை
5. மருதம்
6. நெய்தல்
7. பெருந்திணை.

**தொல்காப்பியர் காட்டிய புறத்திணைகள் ஏழு ;**

1. வெட்சி
2. வஞ்சி
3. உழிஞை
4. தும்பை
5. வாகை
6. காஞ்சி
7. பாடாண்

புறப்பொருள் வெண்பாமாலை என்னும் நூல் புறத்திணைகளைப் பன்னிரண்டாக வகுத்துள்ளது.அவை **வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை, பாடாண்,பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை.**

| திணை | விளக்கம் | துறை எண்ணிக்கை |
|---|---|---|
| வெச்சி | மன்னர் ஆணைப்படி வீரர்கள் பகைநாட்டுப் பசு கூட்டங்களைக் கவர்தலும், கவர்ந்தவற்றை மீட்டலும். | 14 |
| வஞ்சி | மண்ணாசை கொண்டு அரசன் போர் தொடுத்தலும் மண்ணாசையுடன் வரும் பகை அரசனோடு எதிர் நின்று போரிடுதலும். | 13 |
| மூலிகை | பகை மன்னனின் கோட்டையை முற்றுகையிடுதலும் கோட்டையின் உள்ளிருக்கும் வேந்தன் காத்தலும். | 8 |
| தும்பை | தனது வலிமையை நம்பி வந்த மன்னனை, எதிர்த்து வலிமையுடன் போரிடுதல். | 12 |
| வாகை | போர் வீரம் மட்டுமல்லாமல் பல்வேறு ஒழுக்கங்களிலும் மற்றவரிலிருந்து மேம்பாடு மிக்கவராகத் தனித்து நிற்றல். | 18 |
| காஞ்சி | நிலையாமையை உணர்த்துவது. சிறப்புடைய வீட்டின்பம் காரணமாக, பல வழிகளிலும் நிலையற்ற உலகில் பொருந்திய நல்ல நெறியினை மேற்கொள்ளுதல். | 20 |
| பாடாண் | ஒருவர் பெற்ற கல்வி, புகழ், ஈகை போன்ற மேம்பாடுகளை போற்றி பாடுதல். | 10 |

**தமிழும் கிரேக்கமும்**

வெண்பாவின் ஓசை செப்பலோசை ஆகும். கிரேக்கத்தில் வெண்பா வடிவ பாடல்கள் சாப்போ எனப்படுகின்றன. தொல்காப்பியர் கூறும் இளிவரல் என்ற மெய்ப்பாடு துன்பச் சுவையினை குறிக்கிறது. கிரேக்கத்தில் துன்ப சுவையுடைய பாடல்கள் கிளி கியா எனப்படுகின்றன. எறிதிரேசியன் ஆப் த பெரிபுலஸ் (periplus of the erythraean sea) என்ற நூலின் பெயரில் அமைந்துள்ள தமிழ்ச்சொல் எறிதிரை ஆகும். அதாவது கடலை சார்ந்த பெரிய புலம் என்பது பொருளாகும்.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in